# இ-ஏல விற்பனை அறிவிப்பு

இந்திய அரசு, நிதி அமைச்சகம்

## கடன் வசூல் தீர்ப்பாயம்

### வசூல் அதிகாரி அலுவலகம்

2வது & 3வது தளம், ஜவான்ஸ் பவன், பயணியர் விடுதி ரோடு, கோயமுத்தூர் – 641 018.

सत्यमेव जयते

**Recovery proceedings (R.P) No.95/2009 in DRC No.34/2009 in TA No.390/2002**

(1993ம் வருடத்திய கடன் வசூலுக்கான வங்கிகள் மற்றும் நிதி நிறுவனச் சட்டம் மற்றும் 1961ம் வருடத்திய வருமான வரித்துறை சட்டம் இரண்டாம் அட்டவணை விதி 38 மற்றும் 52(2) ன் கீழ் விற்பனை)

**இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி, கோயமுத்தூர் எதிர்**
**M/s. கோயமுத்தூர் சிமெண்ட் புராடக்ட்ஸ் பிரைவேட் லிட் மற்றும் பிற இருவர்**

பெறுநர் : **1) M/s. கோயமுத்தூர் சிமெண்ட் புராடக்ட்ஸ் பிரைவேட் லிட்.**, எண்.425, மேட்டுப்பாளையம் ரோடு, கோயமுத்தூர் – 641043. **2) P.U.பால்சன்**, த/பெ. P.V.உக்குரு, எண்.80, சண்முகா தியேட்டர் ரோடு, கோயமுத்தூர் – 641002. **3) K.M.சங்கரன் (காலமானவர்), சட்டபூர்வ பிரதிநிதி செல்வி. கிரிஜா**, எண்.147, ராஜு நாயுடு வீதி, டாடாபாத், கோயமுத்தூர் – 641012.

1. கடன் வசூல் சான்றிதழ் தொகை : **ரூ.1,91,55,290.57** (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஒரு லட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து இருநூற்றுத் தொண்ணூறு மற்றும் பைசா ஐம்பத்து ஏழு மட்டும்) 20.09.2009 தேதி வரை.
2. 31.08.2017 தேதி வரையான செலுத்தவேண்டியுள்ள தொகை : **ரூ.2,53,27,374/–** (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து மூன்று லட்சத்து இருபத்து ஏழாயிரத்து முன்னூற்று எழுபத்து நான்கு மட்டும்)

ஆதலால் கீழே ஒப்பிட்டுள்ள அலுவலர் குறிப்பிட்ட சான்றிற்கிணங்க அட்டவணையில் கண்ட சொத்துக்களை 'உள்ளது உள்ளவாறு' என்ற அடிப்படையில் விற்பனை செய்ய உத்தரவிட்டுள்ளார்.

**குவியல் எண். ஒன்று**

**சொத்தின் உரிமையாளர் அல்லது கூட்டு உரிமையாளராக உள்ளோரிடமிருந்து தீர்மானிக்கப்படும் சொத்தின் வருவாய் அல்லது வருவாயின் பங்கு ஏதேனும் / அவர்களது பெயர்களும் அவர்களது உடைமையான / விற்கப்படும் சொத்தின் விபரங்கள்.**

**2வது ஷெட்யூல்**

கோயமுத்தூர் மாவட்டம், கோயமுத்தூர் தாலுகா, குறிச்சி கிராமம், சர்வே எண்.593/3, மனை எண்.22 மற்றும் 23 ல், கிழமேல் இருபுறமும் 120 அடி, தென்வடலாக 80 அடி. எல்லைகள் : மனை எண்.21 க்கு வடக்கு, மனை எண்.24க்குத் தெற்கு, மனை எண்.17 மற்றும் 18க்குக் கிழக்கு, இட்டேரிக்கு மேற்கு. நிலத்துடன், அங்கு கட்டப்பட்டுள்ள அனைத்து கட்டமைப்புகள், அங்குள்ள/நிலையாக நிறுவப்பட்டுள்ள இயந்திரம் மற்றும் தளவாடங்கள் மற்றும் அங்கு பூமியில் உள்ள இன்னபிற எவையும் உட்பட.
(காலி நிலம் – 9600 சதுரடி. விற்பனைப் பத்திர எண்.1143/82, தேதி : 09.03.1982, பிரதிவாதி எண்.2 ன் பெயரில் உள்ளது)

| | |
|---|---|
| குறைந்தபட்ச நிர்ணயவிலை | **ரூ.40,80,000/–** (ரூபாய் நாற்பது லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) |
| குறைந்தபட்ச வைப்புத்தொகை | **ரூ.5,00,000/–** (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) |
| ஏலத்தின் உயர்வு மடங்கு | **ரூ.50,000/–** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) |

**இ–ஏல விபரம்**

| | | |
|---|---|---|
| 1 | இ–ஏலத் தேதி மற்றும் நேரம் | **26.10.2017. காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை.** விற்பனை முடிவு செய்யப்படும் வரை தன்னிச்சையான 5 நிமிட நீட்டிப்புடன் |
| 2 | பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் ஏலக் குறிப்பீட்டினை, அடையாள மற்றும் விலாசச் சான்று ஆவணங்களுடன் ஆன்லைனில் சமர்ப்பிக்க கடைசித் தேதி | **24.10.2017,** அல்லது அதற்கு முன்னதாக |
| 3 | ஆன்லைனில் சமர்ப்பித்த ஏலக் குறிப்பீட்டின் நகலை, இணைப்புகளுடன், கோயமுத்தூர், கடன் வசூல் தீர்ப்பாய,வசூல் அதிகாரிக்கு சமர்ப்பிக்க கடைசி தேதி | **25.10.2017** மாலை 4.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக. |
| 4 | சொத்தினைப் பார்வையிடும் நாள் மற்றும் நேரம் | 20.10.2017 அன்று வங்கியின் நோடல் அதிகாரியின் முன் அனுமதியுடன். |
| 5 | **ஏலத்திற்கான விலைக் குறிப்பீட்டுப் படிவத்தை பதிவேற்றம் செய்ய மற்றும் விரிவான நிபந்தனை விபரங்களுக்கான இணையதளம் "https://drt.auctiontiger.net"** விலாசம் : M/s. இ–புரொக்யூர்மெண்ட் டெக்னாலஜீஸ் லிட்., A–801, வால் ஸ்ட்ரீட் II, ஓரியண்ட் கிளப் எதிரில், குஜராத் கல்லூரி அருகில், எல்லிஸ் பிரிட்ஜ், அகமதாபாத் – 380 006, தொலைபேசி : 079–40230847 **மேலும் விபரங்களுக்கான தொடர்புக்கு : பிரவீண் குமார் தேவர், மொபைல் எண்.8866353334** அல்லது கவியரசு ராமராஜ், மொபைல் எண்.9655591945, இ–மெயில் : sales@auctiontiger.net | |
| 6 | **இ–ஏலம் குறித்து மற்றும் விற்பனைக்குள்ள சொத்தினைப் பற்றிய மேலும் விபரங்கள் அறிய, தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரம் பெற்ற அலுவலரின் பெயர் மற்றும் தொலைபேசி எண்.** திரு.சுனில், மேலாளர், இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி, முதல் தளம், மேஃப்ளவர் 'E' கேஸில், எண்.72, டாக்டர் பாலசுந்தரம் ரோடு, கோயமுத்தூர் – 641018. தொடர்பு எண்.0422–2206014, 2206000, மொபைல் : 9810288398. | |
| 8 | **RTGS/NEFT மூலமாக EMD செலுத்த, வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண். விபரம் :** பாரத ஸ்டேட் பாங்கு, ரெட் ஃபீல்ட்ஸ் கிளை, கோயமுத்தூர். **கணக்கு எண்.31527599107,** வசூல் அதிகாரி, கடன் வசூல் தீர்ப்பாயம் பெயரில் (IFSC கோடு SBIN0006577). செலுத்திய விபரங்களை ஏலக் குறிப்பீட்டுப் படிவத்திலும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். | |
| 9 | **அதிகபட்ச தொகைக்கு தேர்வானவர், தொகை செலுத்தும் விபரம் :** வெற்றி பெற்ற ஏலதாரர் விற்பனை உறுதி செய்யப்பட்ட தொகையில் குறைந்தபட்ச வைப்புத் தொகை கழித்து 25% தொகையை ஏலம் உறுதியான அன்றே RTGS/NEFT மூலமாக ஆன்லைனில் வ.எண்.7 ல் குறிப்பிட்டுள்ளபடி மேற்குறிப்பிட்ட கணக்கில் செலுத்திவிட வேண்டும். மீதமுள்ள 75% விற்பனைத் தொகையை சொத்து விற்பனை செய்யப்பட்ட நாள் தவிர்த்து அடுத்த 15 நாட்களுக்குள், அல்லது 15ஆம் நாள் ஞாயிறாகவோ, வேறு விடுமுறை நாளாகவோ இருப்பின் அதற்கடுத்த முதல் அலுவலக வேலை நாளில் குறிப்பிட்ட முறையிலேயே செலுத்திவிட வேண்டும். இத்துடன் சொத்தை வாங்கும் அவர் 2 சதம் பவுன்டேஜ் கட்டணம் ரூ.1,000/– ஆகும் வரையும், 1 சதம் அதற்கு மேல் உள்ள அனைத்து நிர்ணயத் தொகைக்குமாகச் சேர்த்து பதிவாளர், கடன் வசூல் தீர்ப்பாயம், கோயமுத்தூர் என்ற முகவரிக்கு எடுக்கப்பட்ட வங்கி வரைவாகச் செலுத்திவிட வேண்டும். | |

இந்த ஏலமானது கடன் வசூலுக்கான வங்கிகள் மற்றும் நிதி நிறுவனச் சட்டம் 1993 பிரிவு 25 முதல் 29 வரை மற்றும் 1961ம் வருடத்திய வருமான வரித்துறை சட்டம் இரண்டாம் அட்டவணைமேலும் 1962 ம் வருட ITCP விதிகளின் கீழ் நடைபெறும். விருப்பமுள்ள நபர்கள் மேலும் விபரங்கள், பிற நிபந்தனை விபரங்கள் மற்றும் ஏலக் குறிப்பீட்டுப் படிவ மாதிரி ஆகியவற்றுக்கு https://drt.auctiontiger.net இணையதளத்தினை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**நிபந்தனை விபரங்கள் :**

வேறு எந்தவிதமான ஒத்திவைப்பு உத்தரவுகள் வராதவரையில் சொத்தானது மேற்குறிப்பிட்ட நாள் / நேரத்தில் "ஆன்லைன் மின்னணு ஏல" முறையில் https://drt.auctiontiger.net என்ற இணையதளம் மூலமாக விற்பனை செய்யப்படும். கடவுச்சொற்கள் (பாஸ்வேர்டுகள்) அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து குறிப்பிட்ட குறைந்தபட்ச ஏலத் தொகையை செலுத்திப் புள்ளி சமர்ப்பித்த ஏலதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் ஏலதாரர்கள் செல்லத்தக்க டிஜிடல் கையெழுத்தினை கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.

கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் சான்றில் தெரிவித்துள்ளவாறான நிலுவைகளையும், செலவினங்கள் வட்டி சேர்த்து (விற்பனைக்கான செலவு உட்பட) ஏலம் நடத்தும் அலுவலர் ஏலம் முடிவதற்கு முன்னரே அவரது மனநிறைவடையும் வகையில் செலுத்தப்பட்டிருப்பின் ஏலம் நிறுத்தப்படும்.

இந்த ஏலத்தை நடத்தக் கடமைப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏலத்தில் பங்கேற்பதோ அல்லது மேற்படி சொத்தில் ஈடுபாடு காட்டுவதோ கூடாது. சொத்தானது வருமான வரிச்சட்டம் 1961ன் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும், மேலும் கீழ்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டே விற்பனை செய்யப்படுகிறது.

இவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் கீழே குறிப்பிட்ட அலுவலர் அறிந்து, தெரிந்து கொண்டவகையில் சரியானது எனத் தெரிவிக்கும் அதே வேளையில், இந்த அறிவிப்பில் ஏதேனும் தவறுகளோ, விடுபடுதலோ, தவறான தகவல்களோ இருப்பின் அதற்கு அவர் எவ்வகையிலும் பொறுப்பாக மாட்டார்.

1. நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விலைக்குக் குறையாது யார் அதிக தொகைக்கு ஏலம் கோருகிறாரோ, அவரே ஏலத்தில் வென்றவராக அறிவிக்கப்படுவார். அத்தொகை போதுமானதாக இல்லை என்று கருதினாலோ, அன்றி அத்தொகை குறைவானதாக உள்ளதெனக் கருதினாலோ அவ்வுயர் ஏலத் தொகையினை ஏற்பதோ, மறுப்பதோ அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் முடிவுக்கு உட்பட்டதாகும்.

2. குறைந்தபட்ச வைப்புத் தொகையானது RTGS/NEFT/நேரடியாக மேற்குறிப்பிட்ட கணக்கு எண்ணில் செலுத்தப்பட்டிருப்பதுடன், பான்கார்டு நகல், அடையாளச் சான்று மற்றும் இருப்பிடச் சான்று நகல், இ–மெயில் ஐடி, மொபைல் எண் மற்றும் ஏலம் கூறுவது கம்பெனியாக இருப்பின் அதன் பிரதிநிதிக்கான ஆவணச்சான்று, கம்பெனியின் சார்பாக செயல்படும் அங்கீகார நகல், அதற்கான வைப்புத் தொகை ஏதேனுமிருப்பின் அதன் ரசீது ஆகியவை இணைக்கப்பட வேண்டும். குறிப்பிட்டுள்ள தேதிக்குப் பிறகு முன்வைப்புத் தொகை செலுத்தும் ஏலதாரர்களின் ஏலக் குறிப்பீடுகள் பரிசீலிக்கப்பட மாட்டாது. வெற்றி பெற்ற ஏலதாரர் விற்பனை உறுதி செய்யப்பட்ட பின்னர், இந்த விற்பனை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி சொத்தினை வாங்கிய தொகையினை உடனடியாக டெபாசிட் செய்ய வேண்டும்.

3. விற்பனையானது விற்பனை செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நிபந்தனைகளின்படி அனைத்தும் நிறைவேற்றப்பட்டு, வேறு பிற காரணங்களுக்காக சட்டத்தால் ரத்து செய்யப்படாத வகையில் உறுதி செய்யப்படும். விற்பனைச் சான்று, விற்பனை உறுதி செய்யப்பட்ட பின்னர் வெற்றி பெற்ற ஏலதாரருக்கு வழங்கப்படும்.

குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தொகை செலுத்தத் தவறினால், விற்பனைச் செலவினம் கழித்து மீதமுள்ள வைப்புத் தொகை, கீழே ஒப்பமிட்ட அலுவலர் சரியானதெனக் கருதும் பட்சத்தில் அரசுக்கு இழப்பீடாக எடுத்துக் கொள்ளப்படுவதுடன், இழப்பு ஏற்படுத்திய வாங்குபவர் அச்சொத்தின் மீதோ அல்லது சொத்தை மறு ஏலத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் வசூலாகும் தொகையிலோ எவ்வித உரிமையும் கோர இயலாது. புதிய ஏல விற்பனை அறிவிப்பு வெளியிடப்பட்டு சொத்து